# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-25358718, 9444058718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:119:2019 01.04.2019

அன்பார்ந்த தோழர்களே !

## சேலம் மாநகரில் சங்கத்தின் 23வது மாநாடு

நமது சங்கத்தின் கடந்த மாநாடு 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 9-10 தேதிகளில் மதுரை மாநகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் 23வது மாநாட்டை வரும் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில், சேலம் மாநகரில் நடத்திட கடந்த மார்ச் 23ஆம் நாள் காரைக்குடியில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டம் முடிவு செய்துள்ளது.

கடந்த 45 ஆண்டுகளில், நமது சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் முதல் முறையாக காரைக்குடியில் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில், 11வது இருதரப்பு ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை, பொதுத்துறை வங்கிகள் இணைப்பு, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மாநாடு, அகில இந்திய மத்திய குழுக்கூட்டம், வங்கியின் பங்குகளை ஊழியர்களுக்கு வழங்குவது, கஜா புயல் நிவாரணம், தற்காலிக ஊழியர் பணி நிரந்தரம் ஆகிய முக்கியவை குறித்து விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டது.

இந்த செயற்குழுக் கூட்டத்தை அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் (தமிழ் மாநிலக்குழு) செயலாளரும், அகில இந்திய யூனியன் வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளருமான தோழர்.D.S.கணேசன் அவர்கள் துவக்கிவைத்தார். அவர் தனது உரையில், 11வது ஊதிய உயர்வுப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்கநிலை, வங்கியின் பங்கு விற்பனை ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

சிவகங்கை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர்.மதிமார் சலஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அவர் அப்பகுதியின் தொன்மையான நாகரிகம் குறித்தும், பண்பாடு மற்றும் கலாச்சாரம் குறித்தும், அங்குள்ள தொழிலாளர் நிலை குறித்தும் விளக்கிப் பேசினார்.

சிவகங்கை மாவட்ட அனைத்து வங்கி நகை மதிப்பீட்டாளர் சங்கத்தின் தலைவர் தோழர்.மகேஷ் பாபு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். யூனியன் வங்கியில் நகை மதிப்பீட்டாளர்களுக்கு நமது சங்கம் ஆற்றிய பணிகளுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

நமது வங்கியின் முன்னாள் துணை பொது மேலாளர் (Deputy General Manager) திரு.M.மீனாட்சிசுந்தரம் அவர்கள் இந்தக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, வங்கியுடனான தனது தொடர்பு குறித்தும், ஊழியர் சங்கத்துடன் தான் செயல்பட்ட விதம் குறித்தும் பேசினார்.

கடந்த செயற்குழுக் கூட்டத்திற்குப் பின் ஏற்பட்ட நிகழ்வுகள் குறித்து, பொதுச் செயலாளர் சமர்ப்பித்த அறிக்கையின் மீது பல தோழர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர். பொதுச் செயலாளர் தேவையான விளக்கங்களை அளித்தார். தோழர்.T.குமார், அகில இந்திய அமைப்பின் உதவிச் செயலாளர் என்ற முறையில், அகில இந்திய அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக்கூறினார்.

சங்கத்தின் 31.12.2018 வரையிலான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் சங்கத்தின் பொருளாளர் தோழர்.N.பாலசுப்பிரமணியன் அவர்களாலும், ஊழியர் நல நிதியின் 31.12.2018 வரையிலான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் அதன் பொருளாளர் தோழர்.V.வெற்றிவேல் அவர்களாலும், 22வது மாநாட்டின் மலர் வெளியீட்டுக்குழுவின் கணக்குகள் தோழர்.V.வெற்றிவேல் அவர்களாலும் செயற்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சங்கத்தின் 23வது மாநாட்டை நடத்துவது குறித்து விரிவாக விவாதித்த செயற்குழு, அடுத்த மாநாட்டை வரும் செப்டம்பர் மாதவாக்கில் சேலம் நகரில் நடத்திட முடிவு செய்தது. சேலத்திலுள்ள நிர்வாகிகள், அரங்கம் கிடைப்பதைப் பொறுத்து மாநாட்டு தேதியை முடிவு செய்வார்கள். வழக்கம்போல, மலர் வெளியீட்டுக்குழுவைச் சென்னையில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கஜா புயலினால் மிகவும் பாதிக்கப்பட்ட தோழர்கள் நால்வருக்கு ரூ.9000/- வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, கடன் நிவாரணம் கோரி நாம் விடுத்த வேண்டுகோள் மத்திய அலுவலகத்தில் பரிசீலனையில் நீண்ட நாட்களாக இருப்பது குறித்து விவாதித்த செயற்குழு, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. உடனடியாக நமது கோரிக்கை ஏற்கப்படாவிடில், தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. தீர்மானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

“The Executive Committee of Union Bank Employees' Union - Tamilnadu held at Karaikudi on 23rd March 2019, expressed its grave concern over the undue delay in sanctioning of relief to the employees and officers affected by Gaja Cyclone, which hit the southern coastal districts of Tamilnadu on 16.11.2018.

As per Government of Tamilnadu notification the cyclone has “caused extensive damage to huts/houses, agriculture, horticulture, infrastructure, transport etc., leaving thousands of family in relief shelters, inflicted huge blow to power infrastructure, leading to crippling of communication and leading to severe impact on livelihood opportunities”.

Executive Committee appreciates Com.T.Kumar, Secretary and Com.J.Mohan for immediately undertaking relief operations at one of the villages in Thanjavur District and another at Nagapattinam Districts. The Committee also appreciates the comrades, who have contributed to the relief work. Executive Committee also expressed its satisfaction for distributing an amount of Rs.9000/- from the Union to four worst affected employees of the bank.

Based on the Government Order No.481 dated 10.12.2018, our peer bank, Canara Bank released relief loans (Three months Gross Salary to be repaid in 60 monthly installments) to employees and officers working in the cyclone affected 10 Districts.

Union Bank Employees' Union - Tamilnadu vide its letter No.GS:901:2018 dated 27th December 2017 approached the General Manager, Field General Manager's Office, Chennai for

Cyclone relief to the employees and officers. Executive Committee expresses its gratitude to the General Manager for immediately recommending the same to Central Management.

Even though more than three months have lapsed, Central Management is yet to take a decision on this sensitive matter. All India Union Bank Employees Association also took up this matter with the authorities concerned and followed up the same. Despite all efforts, it is regrettable to note that there is no positive outcome to help the employees, who are in distress.

We are given to understand that some of the authorities are having a opinion that this calamity is not comparable with the calamity happened in neighboring State and hence there is no need to consider any relief to the employees affected by this Gaja Cyclone. To the best of the knowledge of the Committee, the scheme formulated by the Bank, giving relief to the employees and officers affected by natural calamity is based on declaration by the concerned State Government and not left to the discretion of some of the officials.

Employees and Officers in the Gaja Cyclone affected 10 Districts were eagerly awaiting a positive response from the Management of the Bank to get some relief at the time of distress. Now, they started feeling that they are being discriminated in the hands of the Management by depriving the relief, which is made available to similarly placed employees and officers working in other States of the Bank.

The Executive Committee after elaborate discussions expressed its deep concern to the Management for undue delay and demanded immediate release of relief loans to the employees and officers in the Gaja Cyclone affected ten Districts. The Executive Committee also authorized the Core Committee of the Union to take appropriate organizational actions to realize the just demands of the employees/officers, if no response from the Management in a reasonable time."

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 23வது மாநாட்டைத் தொடர்ந்து, புதிய மத்திய குழு உறுப்பினரையும், மூன்று மத்திய கவுன்சில் உறுப்பினர்களையும் நியமிக்க சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது. விரிவான விவாதத்திற்குப் பின், கீழ்க்கண்ட தோழர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர் :

மத்தியகுழு உறுப்பினர் : தோழர். P.பிரகாசம், தலைவர்
மத்திய கவுன்சில் உறுப்பினர்கள் : தோழர். E.நகேந்திரன், செயலாளர்
தோழர். M.கலைமாமணி, செயலாளர்
தோழர். N.பாலசுப்பிரமணியன், பொருளாளர்

சமூகப் பொறுப்புள்ள சங்கம் என்ற முறையில், செயற்குழு பொள்ளாச்சியில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை குறித்து தனது கண்டனத்தைப் பதிவுசெய்தது. மேலும் அரசு உடனடியாக தலையிட்டு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி வழங்கி, குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

இந்த செயற்குழுக்கூட்டத்தை சிறப்பாக நடத்திய காரைக்குடி தோழர்களுக்கு நன்றி தெரிவிக்க, கூட்டம் நிறைவுபெற்றது.

தோழமை வாழ்த்துக்களுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்